# 9. கழனி பூக்கும் காலம்

"தொழுது உண் சுவையின் உழுது உண் இனிது"
- கொன்றை வேந்தன்

## ஒருபிடிநெல்மணி

கண்ணப்பன் ஒரு செல்வந்தர். இவர் நல்லூர் என்ற ஊரில் வாழ்ந்து வந்தார். பல ஆண்டுகளுக்கு முன் ஏழை விவசாயியாக இருந்த அவர் தம் வயலில் கடினமாகப் பாடுபட்டு பெருஞ்செல்வந்தர் ஆனார்.

அந்தச் சீமானுக்கு மூன்று மகன்கள் இருந்தனர். அவர்கள் செல்வச் செழிப்பில் வாழ்ந்ததால் உழைப்பின் பெருமையை அறியவில்லை. முதுமையடைந்த கண்ணப்பனின் மனதில் இதனால் கவலை ஏற்பட்டது. 'தமது காலத்திற்குப் பின் இந்த சொத்துக்களைப் பிள்ளைகளால் பாதுகாக்க முடியுமா?' என எண்ணி வருந்தினார். நிர்வாகப் பொறுப்பை யாரிடம் ஒப்படைப்பது என யோசித்தார். அதற்கு ஒரு வழியைக் கண்டார்.



மூன்று மகன்களையும், அவர்களுடைய மனைவியரையும் அழைத்து," எனக்கு வயதாகிக்கொண்டே போகிறது. எனவே, புனிதப் பயணம் சென்றுவர விரும்பு கிறேன். நான் திரும்பி வருவதற்கு மூன்று வருடங்கள் ஆகலாம். நான் வரும்வரை இந்தச் சொத்துகள் அனைத்தையும் பாதுகாத்து வாருங்கள். அதற்குக் கணக்குப் பிள்ளை உங்களுக்கு உதவி புரிவார் " என்றார். புறப்படும் போது தம் மகன்களிடம் ஒவ்வொரு பிடி நெல்மணிகளை கொடுத்துவிட்டுப் "போய்வருகிறேன்", என்று கூறிச் சென்றார்.

அவர் சென்றதும் மூத்தமகன் தன் மனைவியிடம், "இந்த நெல்மணிகளை என்ன செய்வது?" என்று கேட்டான். அவளோ, "நம் வீடு நிறைய மூட்டை மூட்டையாக நெல் இருக்கும் போது இது எதற்கு? தூக்கிக் காகத்திற்குப் போடுங்கள்", என்றாள். அவனும் அப்படியே செய்தான்.

இரண்டாவது மகனும் தன் மனைவியிடம் இதைப்பற்றிக் கூற அவளோ, “அவர் திரும்பிவந்து அதைக் கேட்டாலும் கேட்பார். எதற்கும் அதைப் பாதுகாப்பாக வையுங்கள்” என்றாள். அவனும் அப்படியே செய்தான்.

மூன்றாவது மகன் தன் மனைவியிடம் “ இந்த நெல் மணிகளை அப்பா தந்ததின் காரணம் புரிகிறதா?” என்று கேட்டான். அவள் சற்று யோசித்தாள். “பெரியவர்கள் எதைச் செய்தாலும் அதில் ஓர் உண்மை இருக்கும், ஆலோசித்து ஒரு முடிவுக்கு வருவோம்” என்றாள். மனைவியின் யோசனையை அவனும் ஏற்றுக் கொண்டான்.

வருடங்கள் மூன்று உருண்டோடின. புனிதப்பயணத்திற்குச் சென்ற கண்ணப்பன் திரும்பி வந்தார். அனைவரும் மகிழ்ந்தனர். எல்லோரும், அவருடைய பயண அனுபவங்களைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

சிறிது நேரம் கழிந்ததும், சீமான் தமது மூன்று மகன்களையும் பார்த்து, “நான் புனிதப் பயணம் செல்வதற்கு முன் உங்களிடம் நெல் மணிகள் தந்தேன் அல்லவா? அதைக் கொண்டுவாருங்கள்” என்றார்.

முதல் மகனும், மருமகளும் திருதிருவென விழித்தனர். வேகமாக உள்ளே சென்று பத்தாயத்திலிருந்து ஒருபிடி நெல்லை அள்ளிக்கொண்டு வந்து கொடுத்தார்கள். அதைப் பார்த்த சீமான் “ நான் கொடுத்த நெல்மணிகள் இவை அல்ல. நீங்கள் என்னிடம் பொய் சொல்கிறீர்கள். உங்களை நம்புவதில் பயனில்லை” என்று கூறினார்.

இரண்டாவது மகனும், மருமகளும் அந்த நெல்மணிகளைக் கொண்டுவந்து “நாங்கள் பத்திரமாக வைத்திருக்கிறோம்” என்று பெருமையாகக் கூறினார்கள். அவர் அதைப் பிரித்துப் பார்த்துவிட்டு, “இது நான் கொடுத்த நெல்மணிகள்தாம். ஆனால், நீங்கள் இதைப் பாதுகாத்து வைத்துள்ளீர்களே தவிர பயன்படுத்தவில்லை,” எனக் குறைபட்டுக்கொண்டார்.

மூன்றாவது மகனும், மருமகளும் வெறுங்கையுடன் வந்து நிற்பதைப் பார்த்த சீமான் “நான் உங்களிடம் கொடுத்த நெல்மணிகள் எங்கே?” என்று சற்றுக் கோபத்துடன் கேட்டார்.

உடனே அவன், மனைவியைப் பார்த்தான். அவள் மெல்லிய குரலில் “எங்களுக்கு நான்கு நாட்கள் வேண்டும்,” என்றாள்.

சீமானுக்கு ஒரே ஆச்சரியம்! “நெல்லைக் கேட்டால் நான்கு நாட்கள் வேண்டும் என்கிறாளே! ஏதோ நடந்துள்ளது,” என யூகித்தவாறே ‘சரி’ என்றார். “ஆனால், நான்கு நாட்களுக்கு மேல் பொறுக்க மாட்டேன்,” என்று கடுமையாக எச்சரித்தார்.

மூன்று நாட்கள் கழிந்தன. நான்காம் நாள் காலை நேரத்தில், மாளிகையை ஒட்டிய சாலையில் நெல்மூட்டைகளை ஏற்றியவண்ணம் மாட்டுவண்டிகள் வரிசைவரிசையாக வந்துகொண்டிருந்தன.



மேல்மாடியில் நின்று பார்த்துக் கொண்டிருந்த சீமான், 'யார் வீட்டுக்கோ அவை செல்கின்றன' என நினைத்தார். ஆனால், மாட்டுவண்டிகள் அனைத்தும் அவரது மாளிகைமுன் வந்து நிற்பதைக் கண்டு வியப்புடன் கீழே இறங்கி வந்தார். "யாருடைய நெல் மூட்டைகள் இவை? இங்கே ஏன் கொண்டுவந்தீர்கள்?" என்று அவர் கேட்க, மூன்றாவது மருமகள் அருகில் வந்து பணிவான குரலில், "நம்முடையவை தான் மாமா!" என்றாள்.

சீமான் வியப்படைந்தார். "நம்முடையதா!" என ஆச்சரியத்துடன் கேட்டார். அதற்கு மருமகள், "நீங்கள் கொடுத்துச் சென்ற ஒருபிடி நெல்மணிகள் தான் இவை" என்றாள்.

செல்வந்தருக்கு மயக்கம் வருவது போல் இருந்தது. மூத்த இரண்டு மகன்களும், மருமகள்களும் மலைத்து நின்றனர்.

இளையமகன் நடந்ததைக் கூறத்தொடங்கினான்.

"அப்பா!, நீங்கள் கொடுத்த நெல்மணிகளைத் தோட்டத்தின் மூலையில் விதைத்தேன். நான்கு மாதங்களில் ஒருகூடை நெல் கிடைத்தது. மறுபடியும் அதைப் பெரிய இடத்தில் விதைத்தேன். அது, ஒருமூட்டை நெல்லானது. அதை வேறு இடத்தில் பண்படுத்தி பயிர் செய்தேன். அங்கு நூறு மூட்டை நெல் கிடைத்தது. அதைப் பக்கத்துக் கிராமத்தில் உள்ள சிலருடன் ஒன்றாகச்சேர்ந்து தரிசு நிலங்களை வாங்கி , உழுது நன்செய் நிலங்களாக மாற்றிப் பயிர் செய்தோம். எல்லோரும் சேர்ந்து உழைத்ததால் கூடுதல் விளைச்சல் கிடைத்தது. இந்த நெல் மூட்டைகள் அனைத்தும் அவர்களின் பங்கு போக மீதியுள்ளவை. இவற்றை அறுவடை செய்து இங்கு கொண்டுவந்து சேர்க்கவே நான்கு நாட்கள் அவகாசம் கேட்டோம்" என்று பணிவுடன் கூறினான். அனைவரும் வாயடைத்து நின்றனர்.

இதைக் கேட்ட பெரியவர் மகிழ்ச்சியடைந்தார். தமது சொத்து சுகங்களை நிர்வகிக்கும் பொறுப்பை மூன்றாவது மகனிடம் ஒப்படைத்ததோடு, மூத்த மகன்களையும் அவனுடன் ஒன்றாகச்சேர்ந்து விவசாயம் செய்யும்படி அறிவுரை கூறினார்.

தந்தையின் அறிவுரைப்படி அனைவரும் மகிழ்வுடன் விவசாயம் செய்யத்தொடங்கினர்.

### நடித்துக்காட்டுவோம்

- கதையின் ஒருபகுதியை வாசித்து கதைமாந்தர்களுக்கு ஏற்ப உரையாடல் எழுதி நடித்துக் காட்டுங்கள்.

### எனது கருத்து

- உங்களிடம் ஒருபிடி நெல்மணி கிடைத்தால் நீங்கள் என்னென்ன செய்வீர்கள்?

### கலந்துரையாடலாம்

- பெரியவர் தமது இளைய மகனிடம் சொத்துகளை ஒப்படைத்தது சரியா? கலந்துரையாடிக் கருத்துகளை எழுதுங்கள்.

### எனக்குப் பிடித்தது

- கதையில் உங்களுக்கு விருப்பமான கதாபாத்திரம் எது? ஏன்?

### கற்பனையாக எழுதுவோம்

- சீமானின் இளையமகன் நெல்மூட்டைகளை கொண்டுவராமல் இருந்தால் என்ன நிகழும்? கதையின் முடிவை மாற்றி எழுதுங்கள். பொருத்தமான தலைப்பு அளியுங்கள்.

# ஒன்று பட்டால்

நெல் விளைச்சலை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு சுய உதவிக் குழுக்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றன. நம் நாட்டில் நெல் உற்பத்தி குறைந்து வருவதை நாம் அறிவோம். மக்கட் தொகைப் பெருக்கத்திற்கேற்ப மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்யவேண்டியுள்ளது. அதனால் சுய உதவிக் குழுக்கள் நில உரிமையாளருடன் இணைந்து விவசாயத் தொழிலை மேற்கொள்கின்றனர்.



விவசாயம் செய்யத் தேவையான கடனுதவிகளை விவசாயக் கூட்டுறவு வங்கிகள் வழங்கத் தொடங்கியுள்ளன. கூட்டு விவசாயம் மூலம் உற்பத்தி செய்யப்படும் நெல்லை அரசே நேரடியாகக் கொள்முதல் செய்கிறது. இதனால் உற்பத்தியாளர்களுக்குக் கூடுதல் வருவாய் கிடைக்கிறது.

அனைத்து சுய உதவிக்குழுவினரும் தற்போது நெல் உற்பத்தியில் ஆர்வம் காட்டுகின்றனர். நில உரிமையாளர்களிடமிருந்து நிலங்களை குத்தகைக்கு எடுத்து நெல், வாழை, மரச்சீனி, காய்கறிகள் போன்ற பயிர்களைப் பயிர்செய்கின்றனர். அதன்மூலம் கிடைக்கும் வருமானத்தின் இலாப விகிதத்தைப் பங்கிட்டுக் கொள்கின்றனர். மேலும் சுய உதவி நிறுவனங்களும், விவசாய ஆர்வலர்களும் இம்முறையைப் பின்பற்றுகின்றனர். இதனால் உற்பத்தி பெருகுவதுடன் தரிசுநிலங்கள் விளைநிலங்களாக மாறுகின்றன. இவ்வாறு விவசாய நிலங்கள் பண்பட்டு வருவதும், விவசாயிகள் பயன் பெற்று வருவதும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

### எனது பங்கு

- நீங்கள் எல்லோரும் சேர்ந்து உங்கள் பாடசாலையில் காய்கறித் தோட்டங்கள் உருவாக்கி இருப்பீர்கள் அல்லவா? அதில் உங்கள் பங்கு என்ன? அதை எவ்வாறு பராமரிக்கிறீர்கள்?
  குழுவாகக் கலந்துரையாடுங்கள். கருத்துகளை எழுதி வகுப்பில் வெளியிடுங்கள்.

# கனவு நனவானது

நம் நாட்டின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு. இவர் மிகச் சிறந்த சிந்தனையாளர்; மனிதாபிமானி; நாட்டுப்பற்றுடையவர் என அனைவராலும் போற்றப்படுபவர். சாதனைகளை மனம் திறந்து பாராட்டும் இயல்புடையவர்.



நேரு பிரதமராக இருந்த போது பஞ்சாப் மாநிலத்தில் பிரதாப்சிங் கெய்ரோன் முதலமைச்சராக இருந்தார். ஒருமுறை பிரதமர் பஞ்சாப் மாநிலத்தில் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார். அப்போது, முதலமைச்சர் கெய்ரோனும் உடன் சென்றார். செல்லும் வழியில் சாலையின் இருபுறமும் ஏராளமான தரிசு நிலங்கள் இருந்தன.

அதைப் பார்த்த நேரு கெய் ரோனிடம், “இந்த நிலங்களைச் சாகுபடிக் குக் கொண்டு வர முடியுமானால் பஞ்சாப் மாநிலத்தின் உணவுப் பிரச் சனையை மட்டுமல்லாமல், நாட்டின் உணவுப் பிரச்சனையைத் தீர்க்கவும் அது உதவியாக இருக்கும்” என்றார். கெய்ரோன் பதில் பேசாமல் புன்முறுவல் பூத்தார். ஆண்டுகள் சில சென்றன.

மீண்டும் பிரதமர் நேரு பஞ்சாப் மாநிலத்துக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. இருவரும் காரில் சென்று கொண்டிருக்கும் போது கெய்ரோன் ஓர் இடத்தில் காரை நிறுத்தச் சொன்னார். சாலையின் இருபக்கமும் கோதுமை வயல்கள் காணப்பட்டன. கோதுமைக் கதிர்கள் மாலை வெயிலில் தங்க நிறத்துடன் மினுமினுத்தன.

சற்றுத் தொலைவில் ஓரிடத்தில் களத்து மேட்டில் கோதுமை மலைபோல் குவிந்து கிடக்கிறது.

“இந்த இடம் உங்களுக்கு நினைவிருக்கிறதா?” கெய்ரோன் நேருவிடம் கேட்டார். நேருவுக்கு நினைவு வரவில்லை.

உடனே கெய்ரோன், “சில ஆண்டுகளுக்கு முன் நாம் இருவரும் இந்தச் சாலை வழியாகப் போய்க் கொண்டிருந்தோம். இருபுறமும் இருந்த தரிசு நிலங்களைப் பார்த்து நீங்கள் அந்த நிலங்களை விளைநிலமாக்கிவிட்டால்

நன்றாக இருக்கும் என யோசனை சொன்னீர்கள். அன்று நீங்கள் பார்த்த தரிசு நிலம்தான் இப்போது கோதுமை வயல்களாகக் காட்சியளிக்கின்றன” என நினைவுபடுத்தினார்.

நேருவுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. குழந்தையைப் போல் துள்ளிக் குதித்தார். கெய்ரோனின் கையைப்பிடித்து இழுத்துக் கொண்டு கோதுமைத் தானியம் குவித்து வைக்கப்பட்டிருக்கும் களத்துமேட்டை நோக்கி ஓடினார். கோதுமையை இரு கைகளாலும் வாரி கெய்ரோன் தலையில் அபிஷேகம் செய்தார்.

## தொகுப்பு உருவாக்கலாம்

- பெரியோர்களின் வாழ்வில் நடந்த சுவையான நிகழ்ச்சிகளைத் திரட்டுங்கள். தொகுப்பு வெளியிடுங்கள்.

## வாக்கியமாக மாற்றுவோம்

- **குறிப்புகளைப் பயன்படுத்திப் பொருள்தரும் வாக்கியங்களாக அமையுங்கள்.**

- கண்ணப்பன் – காயல்பட்டினம் – வாழ்ந்தார்.

  ...................................................................................................

- திருவள்ளுவர் – திருக்குறள் – நூல்

  ...................................................................................................

- தைமாதம் – பொங்கல் – கொண்டாட்டம்.

  ...................................................................................................

- நீர், காற்று – அன்றாடத் தேவை


  ...................................................................................................

- நேரு – முதல் பிரதமர் – இந்தியா

  ...................................................................................................

## சொல் கோபுரம் அமையுங்கள்.

1. இதைப் பெண்கள் சூடுவர்.
2. வறுமையால் வாடுபவரை இவ்வாறு அழைப்பர்.
3. நெல் வயலை இவ்வாறு அழைப்பர்.
4. இது இருந்தால் தான் வாழ்வில் முன்னேற முடியும்.
5. நெற்குதிரின் இன்னொரு பெயர்.
6. ஆங்கில மாதங்களுள் ஒன்று.
7. கடலுக்குள் திருவள்ளுவருக்குச் சிலை வைக்கப்பட்டுள்ள இடம்.




## சரியான எழுத்தால் நிரப்புங்கள்

- சற்றுப் பொ............ங்கள் (ரு, று)
- குரலொ........ (லி, ளி)
- பு......ப்படுங்கள் (ற, ர)
- இ......ங்கி வாருங்கள் (ர, ற)
- உடல் மெ......ந்தது (ளி, லி)
- ஒடி ஒ......ந்து கொள் (லி, ளி)
- அடைக்க.........ம் (ள, ல)
- சி.......ந்தது (ண, ன)
- கி.....மை (ள, ழ)

